உங்கள் குரல்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை

# இணைக் குழு பற்றிய அறிமுகம்

உற்பத்தித் திறன் | கலாச்சார விழிப்புணர்வு | சமூக சேவைகளைப் | பயிற்றுவித்தல் | பாதுகாப்பு | வேலை அமைப்பு



International Labour Organization

State of Qatar
Ministry of Administrative Development, Labour & Social Affairs

TAAWON

ஒரு தொழிலாளி என்ற அடிப்படையில் , உங்கள் குரல் முக்கியத்துவம் வாய்ந்தது! நல்ல யோசனைகள் குறித்து பேசுவதற்கு அல்லது பகிர்ந்து கொள்வதற்கு உங்களுக்கு பிரச்சினை இருக்கலாம். ஆனால் அதை நிர்வாகத்திற்கு எப்படி தெரிவிப்பது? அவற்றை முகாமைத்துவத்துக்கு தெரியப்படுத்த சிறந்த வழிமுறை இந்த இணைக் குழுவாகும்



## இணைக் குழு என்றால் என்ன?

கத்தார் தொழிலாளர் சட்டத்தின் கீழ், 30 க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்கள் இணைக் குழுவை அமைக்கலாம். ஒரு இணைக் குழு உங்கள் நிறுவனத்திலிருந்து சமமான எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்களை ஒன்று சேர்க்கிறது.



## ஒரு இணைக் குழு எனக்கு எவ்வாறு உதவ முடியும்?

உங்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் அல்லது பரிந்துரை இருந்தால், இணைக் குழுவிலுள்ள தொழிலாளர் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து அதை உங்கள் நிர்வாகத்துடன் விவாதிக்கலாம்.



## அவர்கள் எத்தனை முறை சந்திப்பார்கள்?

இணைக் குழுக்கள் குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது கூடி முக்கியமான பணியிடப் பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசிப்பர் .

## தொழிலாளர்களை யார் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள்?

தொழிலாளர்கள் தங்கள் சொந்த பிரதிநிதிகளை இரண்டு ஆண்டுகளுக்கு இணைக் குழுக்களில் இருக்க தேர்ந்தெடுக்கின்றனர். அவர்கள் சக ஊழியர்கள் கூறுவதைக் கேட்டு, அவர்களின் பிரச்சினைகள் பற்றி கலந்தாலோசிப்பர். இணைக் குழு பின்னர் கூட்டங்களில் ஒப்புக் கொள்ளப்பட்டதை பணியாளர்களுக்கு தெரிவிப்பார்கள்.

## நான் ஒரு பிரதிநிதியாக போட்டியிட முடியுமா?

உங்கள் நிறுவனத்தில் இணைக் குழு இருந்தால், நீங்கள் தொழிலாளர் பிரதிநிதி தேர்தலுக்கான வேட்பாளராக போட்டியிடலாம். அனைத்து தொழிலாளர்களும், அவர்கள் நேரடியாக நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்டிருந்தாலோ அல்லது அவர்கள் ஒரு ஒப்பந்தக்காரர் அல்லது ஏஜென்சி மூலமாக பணியமர்த்தப்பட்டு, நிறுவனத்தை சார்ந்து இருந்தாலும், தேர்தலில் போட்டியிட முடியும். உங்களிடம் செல்லுபடியாகும் ஒப்பந்தம் இருக்க வேண்டும், குறைந்தது ஒரு வருட சேவையை முடித்திருக்க வேண்டும் மற்றும் நீங்கள் நிர்வாக பதவியில் இருக்கக்கூடாது



## எனக்கு இதற்காக சம்பளம் கிடைக்குமா?

இணைக் குழு உறுப்பினராக இருப்பதற்கு மேலதிக ஊதியம் வழங்கப்படுவதில்லை, இருப்பினும் உங்கள் கடமைகளைச் செய்வதற்கு வேலை நேரத்தில் உங்களுக்கு நேரம் வழங்கப்படும்.



## தேர்தல் நடைப்பெற இருந்தால் நான் எப்படி தெரிந்துக்கொள்வது?

உங்கள் நிறுவனத்தில் இணைக் குழு தேர்தல் நடைபெற இருந்தால், அது எவ்வாறு நடைபெறும் என்பதை உங்கள் நிறுவனத்தின் மனிதவளத் துறை அறிவிக்கும்.

## நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் எனக்கு பயிற்சி அளிக்கப்படுமா?

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், உங்கள் புதிய பங்களிப்பு மற்றும் பொறுப்புகள் குறித்து உங்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

## இது குறித்த மேலதிக தகவல்களை நான் எங்கே பெற்றுக் கொள்ளலாம்?

மேலதிக தகவல்களுக்கு, *www.ilo.org/qatar-office* என்ற இணைய தளத்தை ப் பார்வையிடவும்.